**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

Calender :
Preliminary Register :
Sessions :

Miscellaneous :
Case No. : **S.C.25/2024**

Deposition of witness for :

Prosecution : **P.W. 3**
Defence : **D.W.**
Court : **C.W.**

| | | | |
|---|---|---|---|
| **Name :** | ராமர் | **S/o.(or)W/o. :** | அய்யாசாமி |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of

**21.02.2025**

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1, 2, 3, 5 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கடலூர் மாவட்டம் திட்டக்குடி வட்டம் வடகரம்பூண்டியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என் ஊர்க்காரர்கள் தான். அ.சா.1 –யும் தெரியும். நல்லதம்பிக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்தது எனக்கு தெரியாது. இருவரும் அடித்துக்கொண்டார்கள் என்று கேள்விப்பட்டேன். வெள்ளாற்றங்கரையில் அடித்துக்கொண்டார்கள் என்று கேள்விப்பட்டேன். நான்விலக்கி விடவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

எங்கள் ஊர் கிருஷ்ணசாமி உடையார் மகன் நல்லதம்பிக்கும் பெரியசாமி மகன் கல்யாணசுந்தரம் என்பவருக்கும் நிலம் சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது என்றும் நல்லத்தம்பிக்கு ஒரே இடத்தில் 9 ஏக்கர் நிலம், பம்பு செட்டுகள் உள்ளது என்றும் நல்லதம்பி வீட்டிற்கு பக்கத்தில் 16 செண்ட் நிலம் தங்கம்மாள் பெயரில் உள்ளது என்றும் அந்த இடம் சம்பந்தமாக நல்லதம்பிக்கும் கல்யாணசுந்தரத்திற்கும் பிரச்சனை இருந்தது என்றும் அதன்காரணமாக கல்யாணசுந்தரம் நல்லதம்பியை தீர்த்துகட்டிவிடுவதாக பல இடங்களில் சொல்லிவந்தார் என்றும், 22.01.2017ம் தேதி சுமார் 9 மணியளவில் நான் திருவளந்துறை கிராமத்திற்குட்பட்ட எனது வயலுக்கு சோளம் உடைக்க சென்று கொண்டிருந்தேன் என்றும், அப்போது வெள்ளாற்று வாய்க்கால் மேல்புறம் அருகே சென்றபோது எங்கள் ஊரை சேர்ந்த பெரியசாமி மகன் கல்யாணசுந்தரம் அவரது அண்ணன் சாமிதுரை, சாமிதுரையின் மகன் மாணிக்கம், தங்கராசு மகன் செல்லதுரை, பொன்னுசாமி மகன் அழகுவேல் சாமி ஆளுக்கோர் கட்டையுடன் அடித்துக்கொண்டிருந்தார்கள் என்றும் நான் மோட்டார் சைக்கிளில் வயலுக்கு போக வந்தேன் என்றும் இவர்கள் அனைவரும் நல்லதம்பியை அடிப்பதை பார்த்து அடிக்காதீர்கள் எதுவாக இருந்தாலும் பேசிக்கொள்ளலாம் என்று சொன்னேன் என்றும், அங்கு அழகுவேல் எதிரிகளை தடுக்க போன போது அவர்கள் மிரட்டியதால் அப்படியே நின்றுவிட்டார் என்றும், நல்லதம்பி இறந்துவிட்டார் என நினைத்து அவர்கள் அனைவரும் ஓடிவிட்டார்கள் என்றும், பக்கத்து வயலில் வேலைபார்த்துக்கொண்டிருந்த ராமசாமி படையாச்சி மகன் அய்யாதுரை ரெங்கசாமி மகன் வடிவேலும் அங்கு

வந்தார்கள் என்றும் வடிவேலு நல்லதம்பி மகன் அய்யாதுரைக்கு தகவல் சொன்னார் என்றும், பின்னர் நல்லதம்பியை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், பின்னர் தான் எதிரிகள் 5 பேரும் நல்லதம்பியை கொலை செய்ய திட்டம் தீட்டயதை தெரிந்து கொண்டேன் என்றும் மங்களமேடு காவல் ஆய்வாளர், என்னை விசாரித்த போது இவ்வாறு கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது சொந்த ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.